**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்**

**C.O.S. No.2 / 2023**

**பி.சா.1 / சிவக்குமார் / 20.09.2023**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் சீனிவாச டெக்ஸ்டைல்ஸ் மற்றும் கிராம்ப்டன் டையர்ஸ் என்ற நிறுவனம் நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். அது கூட்டாண்மைநிறுவனம் என்றால் சரிதான. அதில் ரத்தினசாமி, முத்துசாமி மற்றும் சிவக்குமார் ஆகியோர்கள் பங்குதாரர். அதற்கு முன்பு பாலகிருஷ்ணன் என்பவர் பங்குதாரராக இருந்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் சீனிவாச டெக்ஸ்டைல்ஸ் கூட்டாண்மை பெயரில் கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். அதில் வாதியின் தகப்பனார் ரத்தினசாமி பெயரும் இடம்பெற்றுள்ளது என்றால் சரிதான். பாலகிருஷ்ணன் கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து விலகிக்கொண்டது சம்மந்தமாக விலகல் பத்திரமும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்து சம்மந்தமாக பாகப்பாத்திய விடுதலை பத்திரமும் எழுதி பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மற்ற பங்குதாரர்கள் பங்கு கொடுத்துதான அந்த பாகபாத்திய விடுதலை பத்திரம் எழுதி வாங்கப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்து சம்மந்தமாக ரத்தினசாமியிடமோ, அவரது வாரிசுகளிடமோ பாகப்பாத்தியவிடுதலை பத்திரம் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்த வரை கூட்டு சுவாதீனத்தில் தான் இருந்து வருகிறோம் என்றால் சரிதான். இரண்டு நிறுவனங்களுக்கும் வருமானவரி ஒரே கணக்கிலிருந்து செலுத்திவருகிறோம் என்றால் சரிதான்.

2. முத்துசாமி என்ற பங்குதாரரிடம் கணக்கு வழக்குகள் உள்ளது என்றால் சரிதான். வருமானவரி எனது அண்ணன்தான் சரிபார்த்து செலுத்தி வந்தார். வருமானவரி கணக்கு 2014–2015, 2015–2016 ஆகிய வருடங்களுக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 2014–2015 ல் ரத்தினசாமி மூலதன கணக்காக ரூ.77,84,960/– என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது அண்ணன்தான் கணக்குகளை பார்த்து வருகிறார். எங்கள் நிறுவனத்தில் வரவு செலவு கணக்குகள் தான் ஆடிட்டர் மூலம் வருமான வரிக்கணக்காக செலுத்துவோம் என்றால் சரிதான். 2015–2016 ல் ரத்தினசாமி

கொடுக்கவேண்டிய தொகையாக ரூ.62,38,421/– காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் வாதியின் தாயாருக்கு கொடுக்கவேண்டிய தொகையாக ரூ.1,70,000/– காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டு நிறுவனங்களுக்கு உண்டான சொத்துக்களையும் வருமான வரிக்கணக்கில் காட்டியுள்ளோம் என்றால் சரிதான். 2,75,000 லிட்டர் டையிங்கிற்காக அனுமதிக்கப்பட்ட அளவு. தற்போது அனுமதிக்கப்பட்ட அளவை வெளிமார்க்கெட்டில் விற்கமுடியும் என்றால் விற்கமுடியாது. நான் வழக்கிற்காக விற்கமுடியாது என்று பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. நிறுவனத்தின் மூலதனம் எவ்வளவு உள்ளதென கணக்கு வழக்கு ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். கணக்குவழக்குகளை ஒப்படைத்தால் வாதிகளுக்கு பணம் கொடுக்கவேண்டிவரும் என்பதால் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

3. 0 சதவீதம் டிஸ்சார்ஜ் உள்ள கம்பெனி மட்டுமே டையிங் அனுமதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்குண்டான கட்டமைப்புகளை ஏற்படுத்திக்கொண்டு எல்லோரும் டையிங் செய்து வருகிறார்கள்என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்திலிருந்து கனரா வங்கியில் சொத்துக்களை காட்டி 2 கோடிக்கு கடன் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நிறுவனத்தில் சொத்துக்களை கொடுத்துத்தான் கடன் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. தனிப்பட்ட சொத்தை கொடுத்து தான் கடன் வாங்கியுள்ளேன். ரத்தினசாமிக்கும் சொத்தில் 3ல் 1 பங்கு உள்ளது என்றும் பங்குதாரர் நிறுவனத்திலும் அவருக்கு வரவேண்டிய பணம் உள்ளது என்றால் சரியல்ல. அவர் ஏற்கனேவ வாங்கிவிட்டார். நம்பிக்கையின் பேரில் பணம் கொடுக்கப்பட்டது. அதற்குண்டான ஆவணம் எதுவவும் இல்லை. வாதிகளுக்கு கொடுக்க வேண்டிய தொகை குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். அந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் தான் வா.சா.ஆ.18. அந்த புரிந்துணர்வு ஒப்பந்தப்படி பணம் முழுமையாக செலுத்தியதற்கு எங்கள் வசம் ஆதாரம் இல்லை என்றறால் சரிதான். நம்பிக்கையின் பேரில் பணம் கொடுத்தேன்.

**<u>நீதிமன்ற கேள்வி</u>**

பணம் கொடுத்த தேதி மாதம் ஞாபகமில்லை. இரண்டு வருடத்திற்கு முன்பு கொடுக்கப்பட்டது. பணமாக கொடுக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் சொல்வது போல் பணம் எதுவும் கொடுக்கவிலலை என்றும் அது சம்மந்தமாக ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இன்றைய தேதி வரை சொத்திலும் பாகம் தரவில்லை என்றால் சரிதான். சொத்தில் பாகம் பேசவில்லை. பணம் மட்டுமே பேசப்பட்டது. வாதிகளுக்கு வழக்கு சொத்தில் 3 ல் 1 பாகம் உள்ளது என்றும் தை பிரித்துக்கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. அதேபோல் கணக்குப்படி பணம் செலுத்த வேண்டும் என்றால் சரியல்ல. வாதி கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**2 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2023.09.20 18:19:12 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.